# ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற அத்துடன் மேற்பார்வை செய்யப்படுகின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்கள் மீது தடயவியல் கணக்காய்வு/ புலனாய்விற்காக உலகளாவிய செயற்பாடுகள் மற்றும் பன்னாட்டு அனுபவத்துடன் கூடிய நிறுவனமொன்றின் பணியினை பெற்றுக்கொள்ளல்.

**அறிமுகம்**

இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற அத்துடன் மேற்பார்வை செய்யப்படுகின்ற தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்கள் மீது பன்னாட்டு தரநியமங்களுக்கும் சிறந்த நடைமுறைகளுக்கும் இணங்கவும் இலங்கையின் சட்டக் கட்டமைப்பிற்கமைய தடயவியல் கணக்காய்வுவொன்றினை/புலனாய்வொன்றினை மேற்கொள்ள தகைமையுடைய நிறுவனங்களிடமிருந்து ஆர்வ வெளிப்படுத்துகைகளை அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவு ஆலோசகர்கள் குழுவின் சார்பில் இலங்கை மத்திய வங்கி அழைக்கின்றது.

**தகைமைப் பிரமாணம்**

- தடயவியல் கணக்காய்வுகளை/புலனாய்வுகளைக் கொண்டு நடாத்துவதில் உலகளாவிய செயற்பாடுகள் மற்றும் பன்னாட்டு அனுபவத்துடனும் கூடிய நிறுவனமொன்றினால் ஆர்வ வெளிப்படுத்துகைகள் அனுப்பப்படலாம்.
- விலைக்குறிப்பீட்டாளர், ஆர்வ வெளிப்படுத்துகைகள் அனுப்புவதற்கான முடிவுத் திகதியிலிருந்து கடந்த ஐந்து வருடங்களின் போது வங்கித்தொழில், நிதி அல்லது முதலீட்டுத் துறைகளில் குறைந்தது மூன்று மாதகாலம் கொண்ட மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட தடயவியல் கணக்காய்வுகளை/ புலனாய்வுகளை நிறைவு செய்திருத்தல் வேண்டும்.
- கணக்காய்விற்கு/புலனாய்விற்கு குறித்தொதுக்கப்படுகின்ற கணக்காய்வு அணியின் பிரதானியும் அணியின் இரு மூத்த உறுப்பினர்களும் ஓர் உலகளாவிய நிறுவனத்தினைச் சேர்ந்தவர்களாகவும் இதனையொத்த ஒப்படைகளில் பன்னாட்டு அனுபவத்துடன் கூடியவர்களாக இருத்தல் வேண்டும் என்பதுடன் இவ் ஒப்படை வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்படும் வரை அத்தகைய மூத்த உறுப்பினர்கள் முனைப்புடன் ஈடுபடல் வேண்டும்.
- அணியின் உறுப்பினர்கள் மத்தியில் வேண்டப்படும் நிபுணத்துவமானது, தடயவியல் கணக்காய்வு/புலனாய்வுகள், வங்கித்தொழில், நிதி, திறைசேரி தொழிற்பாடுகள், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற விடயப்பரப்புக்களில் இருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நிபுணத்துவமானது அவர்களது தகைமை மற்றும் அனுபவம் என்பவற்றுடன் தெளிவாக இனங்காணப்படவேண்டும்.

**ஆர்வத்தினை வெளிப்படுத்தலினை சமர்ப்பிப்பதற்கான நடைமுறை**

ஆர்வத்தினை வெளிப்படுத்தலும் தொடர்புடைய ஏனைய அனைத்து ஆவணங்களும் (நிறுவனம் பற்றிய முகக்குறிப்புகள், முன்னைய தடயவியல் கணக்காய்வு/புலனாய்வுகள் பற்றிய விபரங்கள், அணியின் உள்ளடக்கம் மற்றும் அவர்களது அனுபவம், தகைமைகள் போன்றன) கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் **“இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்குமுறைப்படுத்தப்படுகின்ற மற்றும் மேற்பார்வை செய்யப்படுகின்ற தெரிந்தெடுக்கப்பட்ட நிறுவனங்கள் மீதான தடயவியல் கணக்காய்வொன்றிற்கான பணிகளைப் பெற்றுக்கொள்ளுதல்”** என பொறிக்கப்பட்ட கடிதஉறையில் பிடிஎஃப் (PDF) வடிவத்திலான மென்நகலுடன் சேர்த்து தாள் படிவத்தில் சமர்ப்பிக்க ப்பட வேண்டும்.

முன்மொழியப்பட்ட ஒப்படைக்கான ஆர்வ வெளிப்படுத்துகை ஆவணத்திற்கான கோரிக்கையானது fa6@cbsl.lk என்ற மின்னஞ்சலுக்குக் கோரிக்கைக் கடிதமொன்றினை (வியாபார கடிதத் தலைப்பில் தயாரிக்கப்பட்ட) அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். ஏதேனும் மேலதிக வினவல்கள் அதே மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்பதுடன் பதிலிறுத்தல்கள் மின்னஞ்சல் ஊடாக அனைத்து விலைக்குறிப்பீட்டாளர்களுடன் பகிரப்படும்.

அனைத்து ஆர்வ வெளிப்படுத்துகைகளும் 2019 ஓகத்து 13 அன்று இலங்கை நேரப்படி 1430 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவேண்டும்.

தலைவர்
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கொள்வனவு ஆலோசகர் குழு
மே/பா நாணயச் சபைச் செயலாளர்
சபைச் செயலகம் - இலங்கை மத்திய வங்கி,
இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு, 00100, இலங்கை